936

உ

சிவமயம்.

தேத்தாகுடி

தர்மலிங்கசாமி
சரித்திரக்கொம்மி.

இஃது

தில்லைவிளாகம்

ஸ்ரீ ஆனந்த ஷண்முகசரணாலய சுவாமிகள்

அவர்கள் மாணாக்கரும்

அகத்தியான்பள்ளி

இராமசேடய்யர் அவர்கள் குமாரனுமாகிய

வயித்தியநாத சர்மாவினால்

இயற்றப்பட்டது.

நாகபட்டணம்

"எட்வர்ட் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்றது.

அக்டோபர்மீ 21உ

Q2998:417
N14.

உ

சிவமயம்.

தேத்தாகுடி

தர்மலிங்கசாமி

சரித்திரக்கொம்மி.

இஃது

தில்லைவிளாகம்

ஸ்ரீ ஆனந்த ஷண்முகசரணாலய சுவாமிகள்

அவர்கள் மாணாக்கரும்

அகத்தியான்பள்ளி

இராமசேடய்யர் அவர்கள் குமாரனுமாகிய

வயித்தியநாத சர்மாவினால்

இயற்றப்பட்டது.

நாகபட்டணம்

"எட்வர்ட் அச்சுக்கூடத்தில்,"

பதிப்பிக்கப்பெற்றது.

1914ஹு அக்டோபர்மீ 21உ

உ

சிவமயம்.

தேத்தாகுடி

தர்மலிங்கசாமி கொம்மி.

காப்பு.

விநாயகர் துதி.

திருவளருஞ் செல்வத் தேத்தாகுடிவாழுஞ்
சீர்கொள் தர்மலிங்கங் காதை தன்னை
உருவளரும்படி யோதிடவே யொரு
வொற்றைக் கொம்பன் பதங்காப்பாமே.

வாணி துதி.

எங்கும் புகழ் தர்மலிங்கஞ் சரித
மெடுத்திவ்வுலகிற் புகன்றிடவே
தங்கும் புகழ்கொள்வெண்டாமரை மீதுறை
தாயிருபாதமலர்த் துணையே.

முருகன் றுதி.

அண்டர் புகழ்கொளுந் தர்மலிங்கமெனு
மய்யன் சரிதமறைந்திடவே
தொண்டர் நேசன் சிவ சுப்பிரமணியன்
றாயமலர்ப்பதங் கடுணையே.

அவையடக்கம்.

அத்தியலைவீச கத்திநகர்வாழ்வ
யித்திய நாதனு மாவனுடன்
பத்திகொளச் செய்த பாக்களிலேபிழை
பாராதிருப்பீரே பாவலர்காள்.

நூல்.

சுரையோடடர்ந்திருக்கும் என்ற நந்தன் சரித்திரமெட்.

சீரார் புவிக்குள் புகழ்பெறுந்
தேத்தாகுடி யெனு நேர்த்திபெறும்
பேரார் பதிக்குண்மதுவன்றிப்
பேணூர் மாத்தினிற் சாணூர்குல

முயர்வே கொளப் பிறந்தானொரு
வுத்தமனுகிய சித்துருவன்
பெயர்வேணிலோ தர்மலிங்கமென்பார்
பித்தனேயே நிகர் சுத்தனவன்

அன்னோன் றனதாய்தந்தைமாருட
னண்டுபதினறுந் த்தாண்டும் வரை
முன்னோர் சொலுஞ் சொற்றவராமலு
முகமனுரையுடனகம்வதியு

மக்காலத்தோர் பிள்ளையாரைக் கொணர்ந்
தாசையுடன் வைத்துப் பூசை செய்தான்
மிக்காகவே பூசை செய்தவந்த
விக்ரகத்தை யெடுத்தக்ரமமாய்

தாய்தந்தை மார்பலருமிவன்
சாணூர் குலத்தையே பேணுனென
வாய்நின்ற குளத்தினிலேயதை
யாழ்த்திவிட்டார் கொண்டு தாழ்த்திவிட்டார்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற காவடிச்சிந்து மெட்.

கொண்டுபோய்க் குளத்திற் றள்ளியே—குணமுளநற் கண
கூடிவிட்டிருக்கப்பள்ளியே—நின்று [பதியைக்

கோதிலாமலே யோதியே வந்து நீதியாய்த்தன தேதிலாத [வோர்
கொம்பனே மனத்திலுள்ளியே--குருவண்ங்குந் தருமலிங்கங்
குழுமியே பார்த்திடத்துள்ளியே.

தொண்டு செய்திடவே நாதனை—துக்ளிலாமற் புகலிலாமற்
றொலையவே மனதில் வேதனை—கொண்டு [வுனைத்
துய்யனேவெனதையனே வொரைங் கையனேபுவிமெய்யனே
தொட்டவாரோவறியேனே—தூயவுனை யிச்சேயனும் விழி
தோன்றக்காணு நாட்டெரியேனே.

கிங்கிங்கிங் பத்தாவே என்ற வர்ணமெட்.

என்றவர் பூசைசெய்திட்டசாமியை
யெங்குந் தேடியுங் காணும—லவ
ரெங்குந் தேடியுங் காணுமல்
நன்றிதுயாரோ செய்திட்டகூதென
நண்ணி யிருந்தனரப்பொழுது—வவர்
நண்ணியிருந்தன ரப்பொழுது.

தாய் தந்தையர்கள் வந்து தர்மலிங்கஞ்
சாப்பிடவாவெனக் கூப்பிடவும்—வந்து
சாப்பிட வாவெனக் கூப்பிடவும்
வாய்பேசாமல் விசாரத்தோடே யொரு
வார்த்தையும் பேசாதிருந்தனரே—யொரு
வார்த்தையும் பேசாதிருந்தனரே.

இன்னவிதமிவர் பேசாதிருந்திட
வேகினரே வந்த தாய்தந்தைய—ருட
னேகினரே வந்த தாய் தந்தைய

ரன்னவராகார மில்லாத தாலன்
றயர்ந்து நித்திரை செய்தனரா லன்
றயந்து நித்திரை செய்தனரால்

அன்பர்க்கருள் புரியா திபகவனு
மப்போதவர் கனவிற் புகுந்து—சாமி
யப்போதவர் கனவிற் புகுந்து
வின்பமேனையேனீ விசாரப்படுகிறு
யிந்தக்குளத்தினில் யானிருக்க—விங்கு
விந்தக் குளத்தினில் யானிருக்க.

என்றுசொல்ல வுடனேகிக் கணேசனை
யெடுத்துக்கொண்டு வந்தோரிடத்தி—லவ
ரெடுத்துக்கொண்டு வந்தோரிடத்தில்
நன்றுபடுஞ் சிறு கொட்டகை யமைத்து
நாதனை வைத்துப் பூசித்து வந்தா—ரந்த
நாதனை வைத்துப் பூசித்து வந்தார்.

பாசுபதம் போலே என்ற மெட்

இந்தவித மாகத்தன
தின்பக்கணேசனையே—மிக
வன்புடன்பூசனையே—செய்
தேர்பெறுமவன் சீர்பெறுகவே
யிலங்க வீசனையே—நிகர்தர்
மலிங்க தாசனையே

அந்தமதாய்க் கூடினரோ
ராதாரவாய்ப்பூமி—புகழ்
தாதப்பிள்ளைசாமி—யெனு

மவனியெங்கணுந் தவநிலைபெறு
மருள்வைத்தநேமி—மன
மருளெணுக்குஞ் சாமி.

கூடியருடந்துமுப
தேசஞ்செய்தனரே—பிர
காசஞ்செய்தனரே—முனங்
கும்பமுனிக் கருடந்தமுருகன்போற்
கொள்ளச்செய்தனரே—பவம்
விள்ளச்செய்தனரே.

ஆடியுடனக்கினியி
லருடருமலிங்க—மெனும்
பெருமனுமங்கம்—விழ
வாழக்குழியைத் தாழப்படுத்தி
யக்கினியும் பொங்க—வெங்கண்
வைக்கிறது தங்க.

என்றுமே காஞ்சிக் கரைக்
கடுத்தவடபுற—முள
பெருத்தபனைமா—மதி
ளெதிரிலக்கினி சிதறவே வளர்த்
திறங்கத்தனசிர—மறையக்
கறங்கினரப்புரம்

அன்று முதலின்றுவரை
யக்கினிப்பனையென்றே—யது
மிக்க விலக நன்றே—பெய
ரடுத்து வந்ததாலெடுத்துச் சொன்னேன்யா
னதன் காரணமின்றே—சாமி
பதம் புகழவென்றே.

அதன் பிறகே புகழு
மத்தருமலிங்க—சாமி
சித்த மகிழ்பொங்க—வூருக்
கடுத்திருந்து பேர் படைத்த புட்பவ
னந்தனிலே பொங்க—வொரு
நந்தவனந்தங்க.

இதம்பெற வேற்படுத்தின
ரிப்பாலன்னவரும்—புவி
யெப்பா லுள்ளவருங்—கண்டு
வேதிவர் சித்தை யோதுதல்சேட
னீராயிரமரும்—நாவும்
போரா தென்பவரும்.

ஓடம்.

இந்த விதமாகவேதா னெழிற்றருமலிங்கமெனு
மந்தங் கொளுமய்யருமே யப்பொழுது மாற்றியதோர்
சிந்தும்புகழ் சித்துக்களைச் செப்புதலாகாதெனினு
மெந்தனுலேவியன்றமட்டி லெடுத்துரைப்பேனிதங்கொளவே

(முடுகு)

ஏரார் புகழ்கொள்ளுமித்தருமலிங்க
மென்றவரியற்றியது மென்னெனிற் கேளீர்
தீரா தவினைகளைத் தீரவேவைத்தார்
திருகுகொளும் வயிற்றுவலி கருகவைத்திட்டார்
போரான குட்டமுதற் பிணியறுத்திட்டார்
பிள்ளையில்லார் பிள்ளை பெறுகவரமீந்தார்

நோனகாசமது நிமிட மோடச்செய்தார்
நேரின்னும் வருநோயை நெக்குவிடச்செய்தார்
சீராயிவ்விதமிவர் செய்திட்டதாலே
திரண்டு சகத்துள்ளோர்கள்சேர்ந்தனர்முன்னாலே
ஊரார்களெல்லோரு மொன்றுபட்டதாலே
யோரிடந் தாபித்து வைத்தாரதன் மேலே
காரார்பொழிற் சூழுங் காஞ்சிக் கரையதிலே
காசினியிலுள்ளோர்கள் கடுகி வந்திடவு
நேராயுடன் தர்மலிங்க வீசனுமே
நிலைபெற்ற சனங்களை நேடித்தன்விழியாற்
பாராவுடனேய்கள் பறந்தோடும்படிக்கே
பண்ணிகாஞ்சித் தலத்திற் பன்னுணின்றிடவே.
(ஏலேலோ)

இப்படியநேக நாளியற்றிவருங்காலே
யிதுதெரிந்து தாசினாரயணப்பய்ய
ரொப்பிலா விவரைப் பரிசோதனை செய்ய
வோடி விடங்கலந்த தொரு வாழைப்பழத்தை
தப்பாகக்கொண்டுவந்து தருமலிங்கய்யா
சாப்பிடிதையென வெடுத்துத் தன்முனிருந்த
யெப்பாகமுள்ளாரக்கு மீந்திடவேயவர்க
ளின்பாகப் புசித்திடவு மேதேனுமிலையா
லப்போதவந்தண ராகா விதென்ன
வாச்சரியமாக வுளவறியவேணுமெனக்
கப்பான கவர்மெண்ட் கலெக்டருக் குரைக்கக்
கடுகிக்கொண்டுவாவெனக் கலெக்டர் பதில்சொல்ல
யிப்பால் வந்திவரை மூடுபல்லக்கிலேற்றி
யேந்திக்கொடு திருச்சிராப்பள்ளிபோய்த்திறந்து

வொப்பாரு மில்லாத விவரைப்பார்த்திடவு
முங்கவரிலாம விக்காஞ்சியினிற்காண
வப்பாலிவர் மகிமை யறையவொண்ணுதென்
ருருமதிசய மடைந்தாண்டிருந்தனரே. (ஏலே.)

சிந்து.

(பல்லவி)

எழிறருமலிங்கம்—இன்னுமியற்றியவோர்
தொழில் சொல்வோமிங்கண்

(அநுபல்லவி)

எங்கும் புகழ்படைத்த சிங்கர் தேத்தாகுடி
தங்குங் காஞ்சிக்கரையும் பொங்கும்படிக் கிருந்த (எழி)

(சரணம்)

இப்பூவின் முன்னே—யிவர்செய்தவேலைகள்
செப்புவதென்னே

இங்கிலீஷ் துரையொருவ ரிரண்டுகுடங்கள் வைத்து
வங்கவொன்று குடத்தி லாவின் மாம்சமிருக்கத்
தங்குமற்றொர்குடத்திற் சாணிப்பாலையும் வைத்தும்
பொங்கு மிதற்குளான பொருளைச் சொலவேவேணும்

தருமலிங்கய்யா—தாரணியோரறியச்
சாற்றுவீர்மெய்யா.

சரிசொல்கிறேனென்று தருமலிங்கய்யரு
மொரு நற்குடத்திற பூவு மோர்குடந்தனிற்பாலும்
மருவியதென்று சொல்ல மாதுரையானவரு
மருமையாய் நீர்சொல்வ தல்லவல்லவென்று

அறைந்தாரப்போது—வய்யருந் துரையேயுநீர்
திறந்தேயிப்போது.

ஆருமறியவே பாருமென்றுசொல்லவும்
சீருள்ள துரையாருந் திறந்தே பார்த்திடவப்போ
சேரு மாம்சக்கூடத்திற் றிவ்ய மலர்வாடையுந்
தேருஞ் சாணிக்குடத்திற் றீம்பாலு மாயிருக்க
விதுவென்ன காலம்—இவர் செய்வேலையே
யிந்திரஜாலம்.

என்றே துரையிருக்க விதுதவிர்த் தோர்தாசில்
சென்றே யிவர்பாதஞ் சேரவருள் வைத்தார்
ரன்றோர் கோமுட்டி தனரிவைக்குப் பொன்னீந்தார்
திண்டாசி ஞாயணய்யர் திராணி குலப்வைத்தார்
மன்னார்குடிப்பேர்—வள்ளிக் கண்ணனென்போனைத்
தன்னாகவைத்தார்

மண்டுமனிதர்களை யண்டுங்காஞ்சிக்கரையிற்
கொண்டு பந்தி பந்தியாய்க் கூட்டித் தனது கண்ணாற்
கண்டு மவவர்க்குள கடும் வியாதிகள் முற்றும்
விண்டு போகவுஞ்செய்து விளையாடினாரின்னும்
செய்ததோர்வேலை—செப்புதலரிதாகுஞ்
சேடன்றனாலே.

செப்பு மிவரிப்படிச் செய்தேயநேகநா
ளொப்பிலாப் புகழைப் பெற்றோருங்குமுனனந்தாவி
விப்பாரிலுள்ளோர்க ளெவருமறியும்வண்ண
மெய்ப்பாக மறையவே மேதினிக்குட் புகுந்தார்
விமரிசையாக—வியந்தாருங்காணவே
தமர்கள் மூனக.

மேதினியுட் புகுந்தவேளையிலே யவருஞ்
சேதிபலசொன்னாஞ் செப்புமதுவெனெனி
லாதியது முதலாவறுபதா மாண்டினிற்
சோதிபெறு மென்குணந்தோன்றவே காண்பிப்பேன்

என்றே சொன்னாம்—யாரும் புகழுமய்ய
ரன்றே சொன்னாம்.

எவரும் புகழுமந்த வீசற் கன்று முதலாத்
தவமாய்ப் பூசைகள்செய்துந் தாரணியிற் புகுந்த
வவர் நாளி லாண்டாண்டநேகம் பேர்க்கன்னமும்
பவந்தொலைந்திடச் செய்தும் பணிகள் செய்திட வாண்டும்

அறுபதும் பொச்சே—யவர்சொன்னபடி மற்ற
வாநந்த வாச்சே.

(மார்கழி மாதம் என்றமெட்)

அன்னவர் புகன்ற தோரறுபது வருடமுமாகிட வாநந்தா
வாண்டு வந்ததுமவரீண்டு தனதருளையவனிகாணவே வைத்
தார்
என்னவெனிலோ முதலிரண்டொருவரின் பேரிலிருந்த
வொர்காச நோயை
யேகவே செய்திடவும் போகவேயுடனின்னு மிருக்கும்
பிணியர் முழுதும்,

வந்தவர் சந்நிதியிற் படுத்துங் காஞ்சித் தலத்தின் மருவுந்
தீர்த்தங்களாகு
மாபெருங்காஞ்சி சின்னக்காஞ்சி பிள்ளையார் தீர்த்தமகிழு
டன் முழுகிப் பின்னு
முந்திய வாக்கினி முழுகிய பனேமா முன்னித்துதிகள்செய்து
மோகத்துடன் சமாதுக் கேகியங்கணுகித் துதிமுழக்க மதா
கப்பண்ணியும்,

அந்தக் கரையின் முனைநந்தவனஞ் செய்த போதவர் வதிந்
திட்டவிடமா
மாலமரத்துப் பணையருகும் புகுந்துபோற்றியாநந்தமாக
வருவார்
இந்தப்படிக்கிப்போது வெள்ளி வியாழனாதியெனுந் தினங்
களின் மிகவே
யிசைகொள நடந்திடும் விமரிசைகள் புகல வென்றனாலி
சைபெறுமோ.

இருந்தபோதிலும் யானுந் தெரிந்தவரையிற் சொல்வே
னின்பமாக்கேட்டிடுவீ
ரின்னகரந்தனிலே மன்னும் புலவோர்களே யேற்கும் பிழை
களறுத்தே
மருந்துகளாலழிய மாட்டாத நோய்களிம்மாபெருஞ் சந்
நிதிமுன்
வருகுமுனோடிடும் வழிசெய்கிறாரிந்த மாநிலந்தனின்மிகவே.

குட்டங்குன்மந்தலை நோயொட்டும் வயிற்றுவலி குருடு
செவிடுவாதங்
குழிப்புண் தடிப்பு காசவிழிப்பு நீரிழிவு வாய்க்கொமட்டல்
பிறட்டலெரிச்சல்
முட்டுமேகோதரமும் பொட்டுப் பொட்டென்றோர் தலைமோ
தும் வலிபவித்திரம்
மூடுமாதரால் வருங் கேடு மின்னமூலகின் மொய்த்திடும்
பலபிணியும்.

நொண்டிச்சிந்து.

ஓடிடவே செய்வா—ரந்த
வுயர்தர்மலிங்கமெனும் பெயர் தரித்தோர்
பாடியவிதுதவிர—பெண்கள்
பைசாசங்க ளெத்தனை சைசாயங்க

ணுடிடுமதைக் கேளீர்—ஒன்றுமே
அய்யாயிதோ போகிறேன் மெய்யே யெனும்
பாடிடுமற்றொரு பேய்—யானையா
பள்ளவிருளனென்னை மெள்ளவிடெனும்
மற்றுமொன்று யான் வீரன்—இந்த
மாதின்மேலே வந்ததை யானேது மறியேன்
சுற்றியே யிங்கொரு கணத்தில்—யானுமே
தூரவோடு வேனினத்தைச் சேரவிடெனும்
இன்னுமொன்று காட்டேரி—யென்னை நீ
ரேதுஞ் செய்யாதிர்போரேனீ தியாயெனும்
துன்னுமொரு சாமுண்டி—தூரப்போரேன்
றொந்தரவு செயாதிர்யான் முந்துவே னெனும்
வேறொன்று வெறியன் யான்—இப்போதே
விம்மரிசையாப் போகிறேனம்மபாரெனும்
ஏறிடுங்கருப்பன்யா—னிந்தப்பெண்ணை
யின்றைக்கே விட்டகல்வே னென்றுஞ்செய்யாதீர்
என்றுசொலு மற்றுமொன்று—நொண்டியன்யா
னேகும் பெண்ணை விட்டிதோ சாகுவேனெனும்
நன்றிருக்கு மாடனும் யானே—இப்பொழுதே
நாதாவோடுவேன் விடை தா தா வெனும்
பெத்தானென்ற பேயன்யானே—இப்பெண்ணைப்
பிடித்தது போது மிதோ விடுத்தேனெனும்
செத்தேன் செத்தேனென்று போகும்—ஒரு பேய்
சீ சீ யிந்தப் பெண்மிகதோசி யெனும்
அழுதுகொண்டேகுஞ் சிலபேய்—சிலபேய்கள்
ஆகா வினிவருதலாகா வெனப்போம்
பழுதுவந்ததே யென்றுபோம்—சிலபேய்கள்
பலபலசொல்லியேகுஞ் சிலபேய்களே
இப்படியநேகம் பேய்கள்—தினந்தின
மேகிச்செலல் கணக்கிலாகுமோ தா

னெப்படி யெடுத்துச் சொல்வதோ—யவர் மகிமை
யின்னுமநேக முளவன்னதையானே
எப்படி யெடுத்துச் சொல்வதோ.

கொம்மி.

இன்னு மகிமைகளென்ன வெனிற்றின
மேகமாக்காவடிகள் வருமே
யன்னமநேக சனங்கட்களிப்பார்க
ளாலயத்தின் முன்னுதினமும்

எண்ணுமெக்காரியஞ் செய்திடினுமுன
மெண்ணிடுவார் தர்மலிங்கத்தையே
நண்ணுமவ்வவர்க ளெண்ணியபடியே
நாடிக்கை கூடவிவருஞ் செய்வார்

ஆறுவயதுக் குழந்தைகளுந் தர்ம
வய்யா வய்யாவென்றறைந்திடுவார்
நூறுவயதுக் கிழவர்களுஞ் சொல்லி
நோய்கள் தீரத்துதிசெய்திடுவார்

சின்னக்காரிய மானுலுந் தர்மலிங்க
தேசிகனைத் துதிபண்ணுமல்
முன்னுகிறதில்லை யென்றுலவர் புகழ்
முழுதுஞ் சொல்லிடப் போகுமோதான்

கோயில்போனுலுந் தருமய்யா சத்தங்
குளம் போனுலுந் தருமய்யா சத்தம்
வாயில் வந்தாலுந் தருமய்யா சத்தம்
மருவுமெங்கணுந் தர்மய்யா சத்தம்

அங்கேபோனாலுந் தர்மய்யா நாமந்தவிர்த்
இங்கேவந்தாலுந் தர்மய்யா நாமம்
எங்கே போனாலுந் தர்மய்யா நாமமாக
வெழுின் மகிமையைக் கொண்டதுவே.

தருமய்யா தருமய்யா வென்கிற சத்தமே
சாலவானதெனிலவ்விடத்தில்
வருகிற மனிதரெவ்வள வென்றுசொல்ல
மாளுமோ சேடன்றனவாலும்

எட்டினமட்டில் ஜனங்க ணிற்பதையா
ரிவ்வளவென்று சொலப்போமோ
பட்டினமோ விதென்றுரும் புகன்றிட
பார்க்குந்தோறுஞ் சனக்கூட்டமாமே.

இனியெதைச் சொல்லப்போகிறேன் யானுமே
யிப்பொழுதே பூவிலுள்ளவர்காள்
நனிவிளங்குஞ் சீர் தர்மலிங்கம்பத
நமஸ்கரித் தருள் பெற்றிடுவீர்.

ஆநந்த வாவணித் திங்கள் முதற்றேதி
யான சோமவாரந் தன்னிலிதை
யானந்தமாக வயித்தியநாதனு
மாவனுடன் றர்மலிங்கம் பேரில்

செய்துமுடித்த பாவையாருங் கேட்டருட்
சேர்த் தருமலிங்கத்தைப்பாடி
யெய்துவீரே யந்தவீசனடியையே
யெக்காலும் பணிந்து வாழ்குவீரே.

முற்றிற்று.